Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 216

வெள்ளிக்கிழமை 30 ஜூன் 2023

ஆனி 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



கல்லுண்டாயில் பயங்கரம்

## மோட்டார் சைக்கிள் விபத்து இரண்டு இளைஞர்கள் சாவு!

இறந்தோரில் ஒருவர் 5 மாதங்களுக்கு முன்னர் திருமணமானவர்

யாழ்ப்பாணம், ஜூன் 30
எதிர் எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.
அராலி - கல்லுண்டாயில் நேற்று பி.ப. 1.30 மணியளவில் நடைபெற்ற விபத்தில், அராலி மத்தியைச் சேர்ந்த ஜெயசுந்தரம் சரோஜன் (வயது - 29), »11

## முல்லைத்தீவில் மனிதப்புதைகுழி

பச்சை சீருடை, பெண்களின் உள்ளாடைகள், மனித எச்சங்கள் பலவும் மீட்பு

**முல்லைத்தீவு, ஜூன் 30**

**கொக்குத்தொடுவாய் மத்தியில் பச்சை சீருடைகள், பெண்களின் உள்ளாடைகள் என்பவற்றுடன் பல்வேறு மனித எச்சங்களும் நேற்று மீட்கப்பட்டுள்ளன. இது மற்றொரு மனிதப் புதைகுழியா என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.** »11



வவுனியாவில்

## கடவுச்சீட்டு மோசடி அரச ஊழியர் கைது

வவுனியா, ஜூன் 30
கடவுச் சீட்டு மற்றும் அடையாள அட்டை மோசடி தொடர்பில் வவுனியா தெற்கு பிரதேச செயலக எழுதுவினைஞர் ஒருவர் உள்ளிட்ட 2 பேர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். »11

கிளிநொச்சியில் துப்பாக்கிச்சூடு;

## சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, ஜூன் 30
கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்களும் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். »11

## லைட்டர் வெடித்து எரிகாயமடைந்த பெண் உயிரிழப்பு

பளை, ஜூன் 30
லைட்டர் வெடித்து எரிகாயங்களுக்கு இலக்கான குடும்பப் பெண் நேற்று மாலை உயிரிழந்தார்.
பளை - இந்திராபுரத்தைச் சேர்ந்த ஜெயந்தன் கேதீஸ்வரி (வயது - 33) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த ஞாயிற்றுக் கிழமை »11

வட்ஸப் மூலம் பெண்களை அசிங்கப்படுத்திய

## இரு இளைஞர்கள் மீது மக்கள் கடும்தாக்குதல்

துப்பாக்கிச்சூடு நடத்தி நிலைமையை கட்டுக்குள்கொண்டு வந்த பொலிஸார்

சிறுப்பிட்டியில் பெரும் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
புத்தூர் கலைஒளி கிராமத்தில் இளைஞர்கள் இருவரின் வீடுகளுக்குள் புகுந்த 50 க்கும் மேற்பட்ட ஊர் மக்கள் அவர்களைத் தாக்கியதுடன் பெறுமதியான பொருள்களையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர்.
பெண்களின் ஒளிப்படங்களை கணினியில் ஆபாசமாக 'கிராபிக்' செய்து சமூக ஊடகங்களில் வெளியிட்டனர் என்று சந்தேகித்தே இளைஞர் இருவரின் வீடு மீது இந்தத் »11

தையிட்டியில் விகாரையமைத்த

## பிக்குவின் ஆடையை களையவேண்டும்

மைத்திரியிடம் மறவன்புலவு சச்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30
தையிட்டியில் விகாரையைக் கட்டிய பிக்குவின் ஆடையைக் களைய வேண்டும் என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், யாழ். மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் »11

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில்

## 2000 கிலோ இரும்பை களவாடியோர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 30
2 ஆயிரம் கிலோ இரும்பை திருடிய குற்றச்சாட்டில் 2 பேர் நேற்றுக் காலை காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள »11

## விஜயகலா மகேஸ்வரன் விபத்தில் படுகாயம்

புத்தளம், ஜூன் 30
முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பயணித்த வாகனம் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில், அவர் படுகாயமடைந்துள்ளார். »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வரர் ஆலயப்பகுதியில் சமூகவிரோதச் செயற்பாடுகள்!

## சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அவதானம்



**யாழ்ப்பாணம், ஜூன் 30**

**ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்தின் சூழமைவில் சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில், ஆலயத்தின் புனிதத்தைக்காக்க சட்டநடவடிக்கை எடுப்பதற்கு அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.**

பிரதேசமட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றபோது இந்தவிடயம் குறித்து ஆராயப்பட்டது. கீரிமலை புனித தீர்த்தக் கேணியில் சமூகவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. கடமையில் ஈடுபடும் அலுவலர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதியில் சட்டவிரோதமான முறையில் அனுமதியின்றி கல், மணல் அகழ்வுகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறான சமூகவிரோதச் செயற்பாடுகளால் ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ளுகின்றனர். எனவே, சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை கண்டறிந்து அவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச செயலாளர் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

கலந்துரையாடலில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஏனைய பொலிஸ் நிலைய அதிகாரிகள், வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், சுகாதாரத்துறை அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-66)



## மடு ஆலய வளாகத்தில்

# டெங்கு நுளம்பை ஒழிக்க புகையூட்டும் செயற்பாடு!

மன்னார் மருதமடு அன்னையின் வருடாந்த ஆடி மாதப் பெருவிழா நடைபெற்று வரும் நிலையில், அங்கு டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மடு மாதா ஆலயத்தின் பெருவிழாவை முன்னிட்டு அண்மையில் இடம்பெற்ற ஆயத்தக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டது.

கூட்டத்தில் மடு பொது சுகாதாரப் பரிசோதகர் ஜே.பி. ரெக் ஷன் றொட்றிக்கோ தெரிவிக்கையில், ஆலய வளாகத்தில் டெங்கு நுளம்பு பெருக்கக் கூடிய இடங்கள் உள்ளதா என ஆராயப்பட்டபோது 21 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மலசலகூடப் பகுதிகள் உள்ளிட்ட பல இடங்களில் நுளம்புக் குடம்பிகள் இனங்காணப்பட்டுள்ளன. ஏற்கனவே இடம்பெற்ற கூட்டத்தில் சுகாதார நலன்கருதி ஆலய வளாகத்தில் புகையூட்டல் செயற்பாட்டை மேற்கொள்ளாதுவிட தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் தற்பொழுது நுளம்புப் பெருக்கமுள்ள இடங்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளதால் புகையூட்டல் செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது - என்றார். (ச-213)

# ஆணைக்குழுக்களுக்கு புதிய தலைவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

தேர்தல்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுக்களுக்குப் புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அவர்கள் நேற்று வியாழக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளனர். ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.டி.பி. தெகிதெனிய, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலதிக தேர்தல்கள் முன்னாள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-ரி2)



# மைத்திரி நேற்று நல்லூரில் வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்றையதினம் நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

சைவப் பண்பாட்டுடன் வேட்டி அணிந்து வந்த மைத்திரிபால சிறிசேன சிதறுதேங்காய் அடித்து நல்லூர்க் கந்தனைத் தரிசித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன, மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன உள்ளிட்ட பலரும் வழிபாடுகளில் கலந்துகொண்டனர். (ச-20)



# மதத் தலைவர்களை சந்தித்தார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள நிலையில், அவர் இங்குள்ள மதத்தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தை யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் வைத்து நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்திய மைத்திரிபால சிறிசேன, தொடர்ந்து ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்று அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், நாக விகாராதிபதியையும் சந்தித்துக் கலந்துரையாடினார். மைத்திரிபாலசிறிசேன, யாழ்ப்பாணத்தில் 3 நாள்கள் தங்கி நின்று பல்வேறு பொதுநிகழ்வுகளிலும் சந்திப்புகளிலும் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-26,20)

# பொலிஸ் பரிசோதகர் விபத்தில் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 30

வாகன விபத்தில் பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் பிரதான பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து மகும்புர அதிவேக வீதி நுழைவாயிலுக்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது. ஹோமாகம பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகரே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் பரிசோதகரை எதிரே வந்த பேருந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2.22)



## குடநாட்டுக் கூ.சங்கங்களில்

# கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 30

101 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை யொட்டி யாழ். குடாநாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் நாளை சனிக்கிழமை கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சகல சங்கங்களிலும் கூட்டுறவுக் கொடிகள் ஏற்றப்பட்டு கூட்டுறவுக் கீதமும் இசைக்கப்படும். அதே வேளை மாவட்டக் கூட்டுறவுச்சபையின் ஏற்பாட்டில் வீரசிங்கம் ம[illegible] சர்வதேச கூட்டுற[illegible] நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

# கூட்டுறவு விழிப்புணர்வுக்காக சைக்கிள் பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

101 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைக்கிளோட்ட வீரர் ஒருவர் சைக்கிளில் பயணம் செய்து இலங்கையைச் சுற்றிவரவுள்ளார்.

'நிலையான அபிவிருத்திக்கான கூட்டுறவு' என்ற தொனிப்பொருளில் கூட்டுறவுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்தப் பயணத்தை அவர் ஆரம்பிக்கவுள்ளார். 68 வயதுடைய வை.கைலைநாதன் என்பவரே இலங்கையை சைக்கிளில் சுற்றிவரவுள்ளார்.

இந்த சைக்கிள் பயணம் நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. இவரின் சைக்கிள் பயணம் 12 நாள்கள் இடம்பெறவுள்ளது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உள்நாட்டுக் கடன் சீரமைப்பு

# பண வைப்பாளர்களுக்கு எந்தப் பாதிப்புமில்லை!



### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 30**

**உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பால் வங்கிகளில் வைப்புச் செய்த 57 மில்லியன் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாது என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வங்கிகள் ஏற்கனவே 50 வீதத்துக்கும் அதிகமான வரிகள் மூலம் திறைசேரிக்கும் பொருளாதாரத்துக்கும் பங்களிப்புச் செய்துள்ளன. இலங்கையின் வங்கி அமைப்பின் மீது மேலும் சுமைகளை சுமத்தக்கூடாது. வங்கிகளின் கடன்களிலிருந்து உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க முற்பட்டால் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் ஊழியர்சேமலாப நிதியத்தின் 9 வீத வட்டிக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். ஏற்கனவே திரட்டப்பட்ட ஊழியர்சேமலாப நிதி மீது அரசாங்கம் கை வைக்காது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கான நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறும்வரை ஊகங்களைத் தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் வெள்ளிக்கிழமையை வங்கி விடுமுறையாக அறிவித்தது - என்றார். (ச-இ)

# கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல செயற்பாட்டாளரிடம் விசாரணை

### ரி.ஐ.டி. முன்னெடுப்பு

கனகபுரம் துயிலுமில்ல மாவீரர் பணிக்குழுவின் பொருளாளரும், தமிழரசுக் கட்சியின் கரைச்சிக் கோட்டக் கிளையின் செயலாளருமான க.ஜெயக்குமார் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை பரந்தனிலுள்ள ரி.ஐ.டி. அலுவலத்துக்கு அழைக்கப்பட்ட அவரிடம் மூன்று மணிநேரம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கனகபுரம் துயிலுமில்ல மாவீரர் பணிக்குழுவின் தலைவரும் அதிபருமான தங்கவேலு கண்ணபிரான், செயலாளர் வீரவாகு விஜயகுமார் ஆகியோர் ஏற்கனவே விசாரணைக்குட்படுத்தப்பட்ட நிலையில் அந்தப் பணிக்குழுவின் பொருளாளரான ஜெயக்குமாரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-113, 125)

# விமானப்படைக்குப் புதிய தளபதி!

விமானப்படைத் தளபதியாக எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச இன்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையின் 19ஆவது விமானப்படைத் தளபதியாக அவர் பதவியேற்க உள்ளார். இவர், கொழும்பு ஆனந்த வித்தியாலயத்தின் முன்னாள் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# தொழில்நுட்ப உபகரணம் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜூன் 30
யாழ்.நகரில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது பெறுமதிமிக்க தொழில்நுட்ப ஒலி உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன என யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற நிகழ்வின்போது இந்தத் திருட்டு நடந்துள்ளது. சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான ஒலி அமைப்புச் சாதனங்கள் திருட்டுப்போயுள்ளன என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-17)



# மருந்து மாபியாக்களை பாதுகாக்கின்றது அரசு!

### சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 30
தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்யும் மாபியாக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால், நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் இடம்பெற்றுள்ள மோசடிகள் தொடர்பில் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சரையும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தையும் வலியுறுத்துகின்றோம். மருந்து ஒழுங்குபடுத்தல் தொடர்பான 9 பிரிவுகளின் தலைவர்களும் மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் விசேட நிபுணர் குழுக்களுக்கும், மீளாய்வுக் குழுக்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். எமது நாட்டுச் சட்டங்களுக்கமையவே மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு, அவை பதிவு செய்யப்படும். ஆனால் இந்தச் சட்டங்களுக்கு அப்பால் சென்று பதிவு செய்யும் நடைமுறையும் காணப்படுகிறது. அதற்கமைய பதிவுகளைத் தவிர்த்து மோசடியான முறையில் பெரும்பாலான மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதன் ஊடாகவே தரம் குறைந்த மருந்துகள் மக்களைச் சென்றடைகின்றன. தரம் குறைந்த மருந்துகளை இறக்குமதி செய்யும் மாபியாக்களைப் பாதுகாப்பதற்காகவா, தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு வேறு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன? என்று நாம் கேள்வி எழுப்புகின்றோம் - என்றார். (ம)




**யாழ்ப்பாணத்தில நேற்று ஒரு மாநாடு நடந்தது. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியின்ர பக்தர்கள் தான் அந்த மாநாட்டை பெருமெடுப்பில நடத்தினவை. எல்லாரும் சிவப்புக்கலர் உடுப்புப் போட்டு, வீதியில மத ஒற்றுமையைக் காட்டுறமாதிரி நாலு சமயப் பிள்ளையளையும் வண்டியில ஏத்தி பவனியெல்லாம் வந்தவை. இந்த மாநாட்டுக்கு பிரதம விருந்தினரா வடக்கின்ர ஆளுநரைத்தான் கூப்பிட்டிருந்தவை. வீதிப்பவனி முடிய , அப்பிடியே எல்லாரும் வீரசிங்கம் மண்டபத்துக்கு வர, அங்க ஆளுநர் தேசியக்கொடி ஏத்தி வைக்க, மாநாடு தொடங்கிறதுதான் பிளான். ஆனால் பவனி முடிஞ்சு, ஆக்களெல்லாம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால கால்கடுக்க அரைமணித்தியாலத்துக்கு கிட்ட வெயிட் பண்ணியும் ஆளுநர் வரேலை. ஆளுக்கு போன் அடிச்சாலும் எடுக்கேலை. அதால அவா வருவாவா, இல்லையா எண்டு தெரியாமல் ஏற்பாட்டாளர்கள் போன் அடிக்கிறதும், ஓடுறதும், முழிக்கிறதும், வெளியில நிக்கிற ஆக்களை 'கொஞ்சம் வெய்ட் பண்ணுங்கோ' எண்டு சொல்லுறதுமா அந்தரப்பட்டிச்சினம். ஒருகட்டத்தில இனியும் வெய்ட் பண்ண ஏலாது எண்ட நிலைமையில, விழாவுக்கு வந்த மாநகர ஆணையாளரைக் கொண்டு கொடியை ஏத்தி, மாநாட்டைத் தொடங்கிச்சினம்.**

**இப்பிடி ஆளுநர் வராமல் விட்டது தற்செயல் இல்லையாம். மாநாடு ஒண்டுக்கு பிரதம விருந்தினரா வரவேணும் எண்டு கேக்க, ஆள் விசயம் தெரியாமல் வாறன் எண்டிட்டா. பிறகு அழைப்பிதழைப் பாக்கத்தான், அது ஒரு இந்துசமய அமைப்பின்ர மாநாடு எண்டு அவாக்கு தெரிய வந்ததாம். கடும் கிறிஸ்தவப் பற்றுக்கொண்ட ஆளுநர் இந்த மாநாட்டுக்குப் போனால் சிக்கல் வரக்கூடும் எண்டு தான், போகாமல் எஸ்கேப் ஆகிட்டாவாம். தனக்காக காத்துக்கொண்டிருக்கிறவையை விடவும், ஆளுநர் எண்ட பதவியை விடவும், அவாவுக்கு மதம் தான் பெரிசாப் போச்சுது.**
**ஒரு நிகழ்வுக்கு விருந்தினராக் கூப்பிட்டால், முதல்ல அந்த நிகழ்வு என்ன, ஆர் நடத்துகினம், என்ன நோக்கத்துக்காக நடத்துகினம் எண்டெல்லாம் அறிஞ்சு போட்டு , அதுக்கு போறதா இல்லையா எண்டு முடிவெடுக்கிறதுதான் பெரியவைக்கு அழகு. ஒருவேளை அந்த நிகழ்வு அவையின்ர கொள்கைக்கு ஒத்துவராட்டி, 'நான் வரமாட்டன்' எண்டு நேர சொல்லிட்டால் பிரச்சினை இல்லையே. இப்பிடி வாறன் எண்டு வாக்குக் குடுத்துட்டு, விழாவுக்கு வந்தவையை எல்லாம் காவல் காக்க வைச்சு, போனையும் எடுக்காமல், வராமலும் இருந்து கழுத்தறுக்கிறது ஒரு ஆளுநருக்கு பொருத்தமான காரியமில்லை. இந்த விழா விசயத்திலேயே இப்பிடிச் சொன்ன வாக்கைக் காப்பாத்த முடியாத ஆளுநர் எப்பிடிச் சனங்கள் சம்பந்தப்பட்ட விசயங்களுக்கு ஆமான முடிவெடுப்பா? அதிலையும் மதவாதம் காட்டமாட்டா எண்டுறது என்ன நிச்சயம். முதல்முறை அவா ஆளுநரா இருக்கேக்கையே தன்ர மதத்துக்காக கனக்க ஓட்டுமாட்டு வேலையெல்லாம் செய்தவா எண்டு சனத்துக்குத் தெரியும். இனியும் மதம் பிடிச்சு ஆடினால் எல்லாம் கதம், கதம் தான்!!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளுதூக்கும் போட்டியில் புஷாந்தனுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், ஜூன் 30

ஹொங்ஹொங்கில் நடைபெற்ற 'ஆசிய - பசுபிக் - ஆபிரிக்க பளுதூக்கும் போட்டியில்' இலங்கை சார்பாகக் கலந்து கொண்ட சற்குணராசா புஷாந்தன் ஸ்குவாட் முறையில் 325 கிலோவைத் தூக்கி மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சற் குணராசா புஷாந்தன் இதற்கு முன்னர் பல்வேறு தேசிய சாதனைகளைப் படைத்துள்ளார் என்பது குறிப்பி டத்தக்கது. (ம-22)



# கடையை உடைத்து திருடர் கைவரிசை!

## இளவாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

இளவாலை வசந்தபுரத்திலுள்ள கடையொன்று உடைக்கப்பட்டு பணம் மற்றும் பொருள்கள் என்பன திருடப்பட்டுள்ளன என இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. கடையின் பின்கதவுக்கு தீவைத்து எரித்து உடைத்து நுழைந்த திருடர்கள் கடையில் வைக்கப்பட்டிருந்த 30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# வாகன இலக்கத்தகடு பட்டியல் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 30

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்திலிருந்து யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்துக்கு வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசசெயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பட்டியலைப் பார்வையிடலாம்.

புதிதாக வாகனங்களைப் பதிவுசெய்த உரிமையாளர்கள், வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் சமர்ப்பித்து தங்கள் வாகனத்துக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி2)

# வடமாகாணத்தில் சீரான வானிலை

கொழும்பு, ஜூன் 30

வடமாகாணத்தில் இன்று சீரான காலநிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும். ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடமத்திய மாகாணத்திலும் புத்தளம், அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாகப் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.45 மணி முதல் மு.ப 10.15 மணி வரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 6ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தல் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ச-ரி-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிந்தித்து செயற்படவேண்டிய நாள். தாய்வழி உறவினர்கள் மூலம் எதிர் பார்த்த காரியம் இழுபறியாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறிய டிப்பீர்கள். காரியங்கள் ஆதாயம் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** மனதில் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். காலையில் பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பாராத பண வரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

**கன்னி:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். எதிர்பாராத வேலைச்சுமையின் காரணமாக சோர்வு உண்டாகும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தாய்மாமன் வழியில் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். செலவுகள் அதிகரிக்கும்.

**தனுசு:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். தந்தைவழியில் அனுகூலப் பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் உங்கள் அலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற் றும் வகையில் சற்று அலைச்சல் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை யைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** திய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாய்வழி உறவுகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். காரியங்கள் இழுபறியாகும்.

**மீனம்:** அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு குறையும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.



# கிளி. சுகாதார சேவைகள் பணிப்பாளராக சேரலாதன்

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவ கலாநிதி சேரலாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது கடமைகளை நேற்றுமுன்தினம் புதன்கிழமை பொறுப்பேற்றார். கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி கடந்த சில மாதங்களாக வெற்றிடமாகக் காணப்பட்ட நிலையில் அவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னதாக அக்கராயன் மருத்துவமனை பொறுப்பு மருத்துவராகவும் கிளிநொச்சி மாவட்ட பதில் திட்டமிடல் மருத்துவ அதிகாரியாகவும் நீண்டகாலம் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சொல்வதும் செய்வதும்

'உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு பொதுமக்களைப் பாதிக்காது. அது, ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட பொதுமக்களின் எந்தவொரு அங்கத்துவ மிகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தாது' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து, 24 மணிநேரத்துக்குள்ளாக அந்த வாக்குறுதி அப்பட்டமாக மீறப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் மறுசீரமைக்கவுள்ள உள்நாட்டுக் கடனில் சுமார் 90 க்கும் மேற்பட்ட வீதம் ஊழியர் சேமலாப நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படவுள்ளது என்ற அறிவிப்பை – உண்மையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்பாக கட்சித்தலைவர்களிடம் நேற்றுமுன்தினம் ஒப்புவித்திருக்கின்றார் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசேகர.

ஊழியர் சேமலாப நிதியத்தில் கைவைத்தால், மிகையான பாதிப்புகளை எதிர்கொள்ளப்போவது தனியார் துறை ஊழியர்களே. தனியார் துறை ஊழியர்களின் உழைப்புத்தான் ஊழியர் சேமலாப நிதியத்தில் சேமிக்கப்பட்டிருக்கின்றது. குறை வருமானத்துடன் பணி செய்துகொண்டிருக்கும் தனியார் துறை ஊழியர்கள் பலர், ஊழியர் சேமலாப நிதியத்தையே தமது பிற்கால சேமிப்பாகக் கொண்டிருக்கின்றனர். அதுதான் அவர்களின் இருப்பு. வாழ்வின் கடைசிக்காலங்களுக்கான ஆதாரம். இவ்வாறிருக்கையில் ஊழியர் சேமலாப நிதியில் கைவைக்கும் அறிவிப்பானது தனியார்துறை ஊழியர்களின் ஓய்வுக் காலத்தில் அல்லது கடைசி நாள்களில் கைவைக்கும் செயலுக்கு ஒப்பானது. இது கண்டிக்கப்பட வேண்டியதும், இம்மியும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும் ஆகும்.

அரசாங்கத்தின் இந்த அறிவிப்பால், தனியார்துறை ஊழியர்களிடையே ஒருவித பதற்றமும், எதிர்காலம் குறித்த அச்சமும் நிலைகொண்டுள்ளதை உணர முடிகின்றது. இந்த அச்சம் தீவிரமாகி தனியார்துறை ஊழியர்கள் தம் உள அமைதியை இழப்பதற்கு முன்னர், ஊழியர் சேமலாப நிதியம் எவ்வாறான அடிப்படையில் கையாளப்படவுள்ளது என்பது குறித்த தெளிவுபடுத்தலை அரசாங்கம் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட, அரசாங்க ஊழியர்கள் பலர், நாட்டுக்குச் சுமையாக உள்ளனர் என்று ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க – தனியார்துறை ஊழியர்களின் பணிச்சுமையைப் புரிந்த பின்னரும் அவர்களின் உழைப்பில் சேமிப்பில் எதிர்காலத்தில் கைவைப்பதை விடவும் மோசமான செயல் வேறொன்றுமில்லை.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும், 'அரசாங்கத்தின் கடன்மறுசீரமைப்பு ஊழியர் சேமலாப அங்கத்துவ மிகுதியில் பாதிப்பை ஏற்படுத்தாது' என்பதான அறிவிப்பை கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து கடந்த 27ஆம் திகதி பகிரங்கப்படுத்தினார் ஜனாதிபதி ரணில். ஆனால் மறுநாளே நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கான கூட்டத்தில் 'அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பில் 93 வீதமானது ஊழியர் சேமலாப நிதியத்தை மையப்படுத்தியது' என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணிலின் கருத்துக்கு முற்றாக முரணான செயற்பாடுதான் நடைமுறையில் சாத்தியமாகியிருக்கின்றது. அப்படியாயின், ரணில் வெளிப்படுத்தும் இதர வாக்குறுதிகளின் நம்பகத்தன்மையும் இங்கே கேள்விக்கு உட்படுகின்றதல்லவா? மாறாக ரணில் உண்மைதான் பேசியிருக்கின்றார் என்றால், அங்கத்துவ மிகுதியில் பாதிப்பை ஏற்படுத்தாத 93 வீதமான உள்நாட்டுக் கடனைச் சுமக்கும் மறுசீரமைப்பு எவ்வாறு சாத்தியம்? என்ற தெளிவுபடுத்தலை ஜனாதிபதியோ அல்லது அவரைச் சார்ந்த அதிகாரிகளோ வழங்கவேண்டும். இதுவே, இலங்கையின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் சேர்த்துச் சுமக்கும் ஒட்டுமொத்த தனியார்துறை ஊழியர்களின் இப்போதைய எதிர்பார்ப்பு.

### நாளொரு நல்வார்த்தை

"உங்களின் உயர்வின் அளவை நிர்ணயிப்பது உங்கள் கெட்டிக்காரத்தனம் அல்ல. உங்களுடைய மனப்பாங்கே"

– ஜிக் ஜிக்லர்




# சீனாவின் கடன்பொறியில் இலங்கை சிக்கவில்லை!

அலிசப்ரி ஆணித்தரம்



**கொழும்பு, ஜூன் 30**

**இலங்கையை சீனா கடன்பொறிக்குள் சிக்க வைத்துள்ளது என மேற்குலக ஊடகங்கள் கூறுகின்றமை ஏற்புடையதல்ல என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மறுத்துள்ளார்.**

சீனாவுக்கான இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், கடந்த சில வருடங்களில் சீனா இலங்கையில் பல முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. சீனாவின் நீடித்த ஒத்துழைப்பு எமக்கு வேண்டும். இருதரப்புக்கும் பயனளிக்கக் கூடிய நட்புறவை மேலும் விஸ்தரிப்பதற்கு இலங்கை ஆர்வமாக உள்ளது.
சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டம் இலங்கையைக் கடன்பொறிக்குள் சிக்கவைத்துள்ளது என மேற்குலக ஊடகங்கள் கூறுகின்றமை உண்மைக்குப் புறம்பானவை. சீனாவின் முதலீடு இலங்கைக்கு மிகமிக முக்கியமானது. இலங்கை கைவிடப்பட்டு கடும் அழுத்தத்தில் இருந்தபோது சீனாவின் முதலீடுகளே இலங்கையின் அபிவிருத்திக்கு உதவின. இலங்கையில் அனைத்துக் கட்சிகளும் சீனாவுடன் சிறந்த உறவைக் கொண்டுள்ளன - என்றார். (ச-இ)



## பிரிட்டன் தூதுவராக அண்ட்ரூ பற்றிக்

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய தூதுவராக அண்ட்ரூ பற்றிக் நியமிக்கப்பட்டுள்ளார்.
இதுவரை தூதுவராகப் பதவிகித்த சாரா ஹல்டனின் பதவிக்காலம் நிறைவுற்றதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அவர் தனது பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி3)

# நாட்டில் மீண்டும் மலேரியா அபாயம்



கொழும்பு, ஜூன் 30

நாட்டில் மீண்டும் மலேரியா நோய் தலைதூக்கியுள்ளது என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
இந்த வருடத்தில் இதுவரை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் 20 மலேரியா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதில் மூவர் வெளிநாட்டவர்கள் எனக் கூறப்படுகிறது.
யாழ்ப்பாணம் மற்றும் கல்முனைப் பிரதேசங்களில் மலேரியாவுக்குக் காரணமான அனோபிலிஸ் ஸ்டீபன்சி நுளம்பு அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ நிபுணர் ஜீவனி ஹரிஷ்சந்திர தெரிவித்துள்ளார். இந்த நுளம்புகளை ஒழிப்பதற்காக நாடு முழுவதும் பூச்சியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே பொதுமக்கள் தமது சுற்றுச்சூழலை நுளம்புகள் பெருகாத வகையில் சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

| நாளை | 01.07.2023 | சுபநேரம் : 02.56 – 04.26 |
|---|---|---|
| | சனிக்கிழமை | ராகுகாலம் : 08.56 – 10.26 |
| | ஆனி 16 | சனிப்பிரதோஷ விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரப் படுகொலைகளை மேற்கத்தேயம் விரும்புகிறது



ரஷ்ய அதிபர் புடின் பேச்சு

**மொஸ்கோ, ஜூன் 30**
**ரஷ்யாவில் சகோதரப் படுகொலைகள் இடம்பெறவேண்டும் என்று மேற்கத்தேய நாடுகள் விரும்புகின்றன. அது ஒருபோதும் நடக்காது. ரஷ்யர்களின் ஒற்றுமையால் மேற்கத்தேய நாடுகளின் கனவு சாகடிக்கப்பட்டுள்ளது என்று ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்தார்.**

வாக்நெர் படையின் கிளர்ச்சி தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நிகழ்வுகள் தொடங்கியதிலிருந்து (வாக்நெரின் படையெடுப்பு) ரஷ்ய இரத்தம் சிந்தப்படுவதைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை எடுத்தேன். இதில் ரஷ்யர்களின் தேச பக்திக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எமது எதிரிகள் துல்லியமாக விரும்புவது இந்த சகோதரப் படுகொலையைத்தான்.
கீவ் நகரில் உள்ள நாஜிக்களும் அவர்களின் மேற்கத்திய ஆதரவாளர்களும், தேசத் துரோகிகளும் ரஷ்யர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், பொது மக்கள் ஒற்றுமையாக இருந்தால் எந்த ஒரு கலகமும் தோல்வி அடையும் என்று இந்த நிகழ்வு காட்டுகிறது. வாக்நெர் அமைப்பினர் மீண்டும் ரஷ்ய இராணுவத்தில் சேரலாம். ரஷ்யாவிலுள்ள உங்கள் வீடுகளுக்குத் திரும்பலாம். இல்லை என்றால் நீங்கள் பெலரஸுக்கு வேண்டுமானாலும் செல்லலாம்'- என்றார். (ம)

# ஆட்சியைக் கவிழ்க்க வாக்நெர் முயலவில்லை

*அதன் தலைவர் ஒப்புதல்*

மொஸ்கோ, ஜூன் 30
ரஷ்யாவில் ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொள்வதற்கு வாக்நெர் படைகள் முயலவில்லை. நாங்கள் எங்களின் எதிர்ப்பைப் பதிவுசெய்தோம். அவ்வளவே - என்று வாக்நெர் படையின் தலைவரான பிரிகோசின் தெரிவித்துள்ளார்.
பெலாரஸில் தற்போது தஞ்சமடைந்துள்ள அவர், தனது படையின் கிளர்ச்சி தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
வாக்நெர் படைகளுக்கு உரிய ஆயுதங்கள் தரப்படாததால் நாங்கள் வீணான உயிரிழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது.
இதனால், நாங்கள் எங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த விரும்பினோம். நாட்டில் அதிகாரத்தை கவிழ்க்க அல்ல - என்றார். (ம)

# அனைத்துத் திசையிலும் உக்ரைன் முன்னேற்றம்!




கீவ், ஜூன் 30
ரஷ்யாவுடனான போரில் அனைத்துத் திசையிலும் உக்ரைன் படைகள் முன்னிலையில் உள்ளன என்று உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இது மகிழ்ச்சியான நாள். தோழர்களுக்கு இது போன்ற பல நாள்கள் வர வாழ்த்துகிறேன். இது ஒரு வேலை மிகுந்த நாள். நிறைய உணர்வுபூர்வ உணர்ச்சிகள் நிரம்பி உள்ளன. எங்கள் சிப்பாய்களுக்கு விருது வழங்குவதற்கும், அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி கூறுவதற்கும், அவர்களுடன் கைகுலுக்குவதற்கும் நான் பெருமைப்படுகிறேன். ஏனெனில் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்துத் திசைகளிலும் உக்ரைன் படைகள் முன்னேறியுள்ளன- என்றார். (ம)

# தென்கொரியர்களின் வயது குறைந்தது!




சியோல், ஜூன் 30
தென்கொரியாவில் ஒருவருடைய வயதைக் கணிப்பதற்கு இதுவரை பின்பற்றப்பட்டுவந்த பொறிமுறை தற்போது கைவிடப்பட்டுள்ளது.
இதனால், தென்கொரியர்கள் அனைவருக்கும் இரண்டு வயது குறைந்துள்ளது.
தென்கொரியாவில் ஒரு குழந்தை பிறக்கும்போதே அந்தக் குழந்தைக்கு ஒரு வயது என்று கணிப்பார்கள். காரணம், தாயின் கருப்பையில் இருந்த நாள்முதல் வயது கணக்கிடப்படுவதாகத் தென்கொரியா தெரிவித்தது. அத்துடன், ஒவ்வொரு ஜனவரி முதலாம் திகதியன்று அனைவருக்கும் ஒரு வயது அதிகரிக்கும் பிறந்த நாளில் வயது அதிகரிப்பு இடம்பெறும் கணக்கீடு தென்கொரியாவில் இது வரை இருந்ததில்லை.
இந்தநிலையில், குழந்தை பிறக்கும்போது ஒரு வயதுடன் பிறக்கின்றது என்ற விவாதத்தையும், ஜனவரி முதலாம் திகதி அனைவருக்கும் வயது அதிகரிக்கும் என்ற கணக்கெடுப்பையும் தென்கொரியா தற்போது கைவிட்டுள்ளது. இதனால், தென்கொரியர்களுக்குத் தற்போது இரண்டு வயது குறைந்துள்ளது. (ம)

## கலிபோர்னியாவில் காட்டுத்தீ தீவிரம்!

வொஷிங்டன், ஜூன் 30
அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் தற்போது கடும் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
தீயணைப்புப் பணியில் பல நூறு வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விமானம் மூலமும் தீயை அணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்களும் வீடுகளும் தீக்கிரையாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இறந்தவர்களின் எச்சங்களுடன் 'ரைட்டன்' நீர்மூழ்கி மீட்பு

*அமெ. கடலோரக் காவற்படை தகவல்*



வொஷிங்டன், ஜூன் 30
வெடித்துச் சிதறிய ரைட்டன் நீர்மூழ்கிக் கப்பலின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் மனித உடல்களின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என அமெரிக்க கடலோரக் காவற்படை தெரிவித்துள்ளது.
கடலுக்கடியில் மூழ்கிக்கிடக்கும் டைட்டானிக் கப்பலைப் பார்ப்பதற்கு 'ரைட்டன்' எனும் சிறியரக நீர்மூழ்கிக் கப்பலொன்றில் 5 கோடீஸ்வரர்கள் அடங்கிய குழு சென்றது.
அட்லாண்டிக் கடலின் கிழக்கே 900 மைல் தொலைவில் சுமார் 13,000 அடி ஆழத்தில் சென்றுகொண்டிருந்த போது 'ரைட்டன்' நீர்மூழ்கியின் தொடர்பு துண்டிக்கப்பட்டு காணாமற்போனது.
நீண்டதேடுதலின் பின்னர் 'ரைட்டன்' நீர்மூழ்கிக் கப்பல் வெடித்துச் சிதறியுள்ளதால் அதில் பயணித்த ஐவரும் உயிரிழந்துள்ளனர் எனவும் சிதறிய நீர்மூழ்கிக் கப்பலின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும் அமெரிக்கா அறிவித்தது. இந்த நிலையில் உடைந்த பாகங்கள் மீட்கப்பட்டு கனடாவின் ஆர்டிக் ஹாரிசான் கப்பல் மூலம் செயின்ட் ஜான்ஸ் நியூபவுண்ட் லேண்ட் துறைமுகத்துக்கு கிரேன் மூலம் கொண்டு வரப்பட்டது. அவை இறந்தவர்களின் உடலின் எச்சங்கள் ஒட்டிய நிலையில் காணப்படுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
மேலும், 'ரைட்டன்' வாகனத்தின் சிதைந்த பாகங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பொருள் வர்த்தகம்

# பெண்ணொருவருடைய வங்கிக்கணக்கு முடக்கம்

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பெண்ணொருவரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என சட்டவிரோத சொத்துகள் பற்றிய விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்ணின் நான்கரை மில்லியன் ரூபா வங்கிக் கணக்குகளே முடக்கப்பட்டன. டுபாயில் மறைந்திருந்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபரொருவரின் தலைமையில் குறித்த பெண் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவந்ததை அடுத்தே அவரின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்**

மயில்வாகனம் சிவகுமாரன்,
இல. 66, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

வழக்காளி -

வழ. இல: 1212 / 2023
காணி

எதிர்

1. க.றமணன், தலைவர்
2. திரு மு.உமாபதிசிவம், உபதலைவர்
3. திரு சே.சபேசன், செயலாளர்
4. திரு.எ.இரத்தினசிங்கம், பொருளாளர்
5. திருமதி.கு.சறோஜினிதேவி, நிர்வாக சபை உறுப்பினர்
6. திருமதி.ப.சந்திரவதனா, நிர்வாக சபை உறுப்பினர்
7. திரு.மு.சத்தியசிவம், நிர்வாக சபை உறுப்பினர்
8. திரு.சி.கமலன், நிர்வாக சபை உறுப்பினர்
9. திரு.க.சுப்பிரமணியம், நிர்வாக சபை உறுப்பினர்
10. திரு.எ.சின்னத்தம்பி, நிர்வாக சபை உறுப்பினர்
11. திரு. உ.வசந், நிர்வாக சபை உறுப்பினர்

அனைவரும் மாவை மத்திய சனசமூக நிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

-எதிராளிகள்-

மேற்படி வழக்கு 2023ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதியன்று தொடரப்பட்டு கௌரவ மாவட்ட நீதிபதி அவர்கள் முன்னிலையில் 05.06.2023 திகதியன்று ஆதரிக்கப்பட்டு குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை பிரிவு 16 கீழான அறிவித்தல் வழங்க கட்டளை வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் யாராவது அக்கறை உடையவர்கள் இருப்பின் 2023ஆம் ஆண்டு ஆடி மாதம் 18 திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ தோன்றுமாறு அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

2023/07/18

மன்றின் கட்டளைப்படி

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம் - மல்லாகம்

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி

(cs 51067) (N.1)



## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



நிகழும் சோபகிருதி வருடம் வைகாசி மாதம் 32ஆம் நாள் (15.06.2023) வியாழக்கிழமை அபரபக்ஷ திரயோதசித் திதியில் அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவி ஸ்ரீவத்ஸ கோத்திரம்

**ஸ்ரீமதி**
**சகுந்தலாதேவி பசுபதீஸ்வர சர்மா**

தோற்றம்
13.09.1942

மறைவு
15.06.2023

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று (30.06.2023) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் நல்லூர் சிவன் ஆலயத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெறும். அந்நிகழ்வில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திப்பதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

179, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS/25380)AH-1


# முன்பள்ளி மழலைகளின் தமிழ்த்தினவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 30

கோண்டாவில் கிழக்கிலுள்ள 'குட்டிச் சுட்டி' முன்பள்ளி மற்றும் 'அகம்' குழந்தைகள் காப்பக மாணவர்களின் தமிழ்த்தின விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் சந்தியிலுள்ள இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவிப் பிரதேச செயலர் திருமதி சிவகரன் பிரணவசொரூபி பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார்.

(ச-66)


**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 85 ரூபாய்

077 334 1281



## மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

**Procurement of Sports Shield & Medal – 2023**

**NP/20/FB/PROC/SH&ME/2023/21**

1. மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2023ம் ஆண்டுக்கான கீழ்வரும் விபரப்படியான பெறுகையினை மேற்கொள்வதற்குத் திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றது.

| Procurement No. | Item | No. of Category Items | Estimated Cost in Mn. Rs. | Bid Security Rs. | Non-Refundable fee Rs. |
|---|---|---|---|---|---|
| NP/20/FB/PROC/SH&ME/2023/21 | Shields -Wood & Plate | 307 | 3.00 | 30,000 | 3,000 |
| | Medals | 806 | | | |

2. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
3. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
4. வழங்குனர்கள் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 3,000/= இலங்கை வங்கியின் "0005932043" இலக்கத்திற்கு வைப்புச்செய்து பற்றுச்சீட்டினை அலுவலகத்தில் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 30.06.2023 தொடக்கம் 17.07.2023 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
5. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 07.07.2023 காலை 10.00 மணிக்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
6. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் பிரதம கணக்காளர் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக் கேள்விகள் 18.07.2023ம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குத் திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுள்ளது.

**தி.ஜோண் குயின்ரஸ்**
**தலைவர்/ மாகாணக்கல்விப் பணிப்பாளர், திணைக்கள பெறுகைகள் குழு (பெரியது)**



## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு
02 . 09 . 1934

இறப்பு
30 . 06 . 2018



**திருமதி அருளம்மா வைற்றஸ்**

ஐந்தாண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை
கனிவாய் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி
நாம் உருகுகிறோம்
இறைவனின் காலடியில்
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
மகன் - ஜெயா, மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

5098


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திருநாவுக்கரசு சிவபாலன்

(முன்னாள் சிங்கர் கொம்பனி முகாமையாளர் - பருத்தித்துறை)

(திதி: ஆனிமாத பூர்வபக்க துவாதசி – 30.06.2023)



தோற்றம் 12 • 05 • 1954

மறைவு 20 • 06 • 2013

எங்கள் குடும்பத்தின் சிகரமாகிய குலவிளக்கே!

மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் சென்று ஒரு தசாப்தகாலம்
பூர்த்தியாகிய இந்நாளில் எந்தச் சந்தர்ப்பத்திலும் எவரையும் அடக்கி
ஆளும் திறமையும், எவரும் எந்தவிதத்தில் உதவி கேட்டு நின்றால்
இல்லை, இயலாது என்ற வார்த்தை வராது உதவிக்கரம் நீட்டி வாழ்ந்தீர்கள்
இந்தப் புண்ணியத்தின் பயனாக உங்கள் விருட்சங்கள் பவனிவரும் வேளைதனில்
அதைப் பூரணமாகப் பார்த்து மகிழ முடியாமல்
அரைகுறையில் ஆண்டவன் எங்களிடம் இருந்து பறித்தாரே!
"காலதேவனின் கணக்கதனை யாராலும் வெல்ல முடியாது"
விண்ணுலகத்தில் உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆயிரம் இருந்தாலும்
எதுவும் இல்லாத உள்ளங்கள் போல் கண்ணீர்ப்பூக்கள் சொரிகின்றோம்.
ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்....

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

கரணவாய் வடக்கு,
பாடசாலை வீதி,
சிங்கர் சிவபாலன் வீதி,
நவிண்டில்.

(CS/509591)AH-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 • 08 • 1946

மறைவு 25 • 06 • 2023

## திருமதி துரைசிங்கம் லில்லியம்மா

கோப்பாய் மத்தி, காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைசிங்கம் லில்லியம்மா கடந்த (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - அன்னமுத்து தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்ற செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைசிங்கத்தின் பாசமிகு அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நேசம்மா, மங்களம், இராசையா, இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியபாமா (கனடா), சத்தியரூபன் (இத்தாலி), சத்தியநாதன் (பிரான்ஸ்), சத்தியசீலன் (பிரதேச செயலகம், தென்மராட்சி), சத்தியபாமினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வடிவேல் (கனடா), சர்மிளா ( இத்தாலி), திருமாலினி (பிரான்ஸ்) மோகனப்பிரியா, நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சண்முகலிங்கம், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பத்மநாதன், காலஞ்சென்ற சகுந்தலா மற்றும் கோமளேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, தணிகாசலம், செல்லத்துரை மற்றும் நாகபூரணி ஆகியோரின் மைத்துனியும், சங்கவி (கனடா), கவின்ஞன் (கனடா), அகிசன் (இத்தாலி), லகிசன் (இத்தாலி), அகர்சன், திலக்சன், அபிலாசினி, அஸ்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி, சாவகச்சேரி. (CR/40244)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

077 484 2968, 077 229 1897

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கைதடி மேற்கு ஞானவைரவர் ஆலயப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் வே.கந்தசாமி தலைமையில் நடைபெற வுள்ளது. பொதுக்கூட்டத்தில் உபயகாரர்கள் மற்றும் ஆலய பரிபாலனசபையினரைப் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச-66)

# மெக்கானிக் தேவை

பளை பிரதேசத்தில் இயங்கும்
ரவி இன்டஸ்ரீஸ் நிறுவனத்திற்கு
மெக்கானிக் (Technicion) தேவை.
தகுதியுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்

076 105 8754

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 23.06.1949

மறைவு 27.03.2023

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
நிர்வகிக்கும் இல்லங்களின் வளர்ச்சிக்கு
நிலையாக உதவக் கூடிய
ஏற்பாடுகளைத் தாமாக முன்வந்து செய்த

திருமதி
**நாகேஸ்வரி சிவானந்தன்**

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த துயரமடைவதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
இல்லப் பிள்ளைகள்,
பணியாளர்கள்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(CR 40245)1-6

## குடியியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு : 192/2023/TR
தன்மை : நம்பிக்கைப்பொறுப்பு
முறையை : சாதாரணம்
பெறுமதி : 150 மில்லியன்

1. மாசிலாமணி சிவசண்முகம்
கொடிகாமம்வீதி, புலோலி

மற்றும் ஏனைய 24 வழக்காளிகள்

வழக்காளிகள்.

எதிர்

1. சதானந்தன் இராகவானந்தன்
கற்கோவளம், பருத்தித்துறை.

2. க.சண்முகவசீகரன்
உடையார்வளவு, துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

3. பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்
வடமராட்சி வடக்கு பருத்தித்துறை

எதிராளிகள்

மேற்குறித்த வழக்கானது மேலே பெயர் குறிக்கப்பட்ட வழக்காளிகளினால் எதிராளிகளுக்கு எதிராக பின்வரும் நிவாரணங்களைக் கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

a. இவ்வழக்கின் வழக்காளிகள் ஒரு கூட்டிணைக்கப்படாத ஸ்தாபனத்தின் அங்கத்தவர்கள் ஆகையாலும் வல்லிபுர ஆழ்வார் ஆலய மகாசபை அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் ஏனையவர்களுக்கு அறிவித்தல் வழங்க குடியியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு16ன் கீழ் அறிவித்தல் வழங்கவும் இவ்வழக்கை 1ம் 2ம் 3ம் எதிராளிகளுக்கு எதிராகக்கொண்டு நடாத்த அனுமதிவழங்குமாறும் கட்டளைஆக்கும்படி.

b. வழக்குடன் தொடர்புடைய வல்லிபுரஆழ்வார் ஆலயத்தின் மேலாண்மை / முகாமைத்துவத் திட்டத்தின் அடிப்படையில் மகாசபைக் கூட்டத்தினைக் கூட்டி நம்பிக்கைப் பொறுப்பாளர்களை தெரிவு செய்யப்படுவதற்கு வழக்காளிகள் உரித்துடையவர்கள் என்ற பிரகடனம் வழங்குமாறும்

c. வழக்குடன் தொடர்புடைய வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் முகாமைத்துவ திட்டத்தில் குறிப்பிடப்பட்ட குறை நிறைவெண் (Quorum) அடிப்படையில் மகாசபை வருடாந்த பொதுக் கூட்டத்தினைக் கூட்டி நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமிக்கும் கட்டாயத் தடையுத்தரவு (Mandatory injunction) பிரதேச செயலாளருக்கு வழங்குமாறும்.

அல்லது மாற்றாக

வழக்குடன் தொடர்புடைய வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் முகாமைத்துவ திட்டத்தில் குறிப்பிடப்பட்ட குறை நிறைவெண் (Quorum) அடிப்படையில் மகாசபை வருடாந்த பொதுக் கூட்டத்தினைக் கூட்டி நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமிக்கும் கட்டளையை பிரதேச செயலாளருக்கு வழங்குமாறும்.

d. 1ம், 2ம் எதிராளிகள் மற்றும் அல்லது அவர்களது முகவர்கள் மற்றும் அல்லது ஏவலாட்கள் மற்றும் அல்லது தாங்குனர்கள் குறித்த வல்லிபுர ஆழ்வார் கோவிலின் மேலாண்மை / முகாமைத்துவத்திட்டத்தின் அடிப்படையில் மகாசபைக்கூட்டத்தினை கூட்டி நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவதனைத்தடுக்கக்கூடாது என்ற கட்டாணை வழங்குமாறும்.

e. 1ம்,2ம் எதிராளிகள் மற்றும் அல்லது அவர்களது முகவர்கள் மற்றும் அல்லது ஏவலாட்கள் மற்றும் அல்லது தாங்குனர்கள் குறித்த வல்லிபுர ஆழ்வார் கோவிலின் மேலான்மை / முகாமைத்துவத் திட்டத்தின் அடிப்படையில் மகாசபைக்கூட்டத்திலன கூட்டி நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவதனைத்தடுக்கக்கூடாது என்ற இடைக்கால தடையுத்தரவு வழங்குமாறும்.

f. 1ம், 2ம் எதிராளிகள் மற்றும் அல்லது அவர்களது முகவர்கள் மற்றும் அல்லது ஏவலாட்கள் மற்றும் அல்லது தாங்குனர்கள் குறித்த வல்லிபுர ஆழ்வார் கோவிலின் மேலான்மை/ முகாமைத்துவத்திட்டத்தின் அடிப்படையில் மகாசபைக்கூட்டத்தினை கூட்டி நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவதனைத்தடுக்கக்கூடாது என்ற நிரந்தரத் தடைக்கட்டளை வழங்குமாறும்.

மேலும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் 06.06.2023 ம் திகதிய கட்டளையின் மூலம் இந்த வழக்கு தொடர்பிலான அறிவித்தலை பிராதில் கோரப்பட்டிருந்தவாறு பொது விளம்பரத்தின் ஊடாக வழங்குமாறு பணித்துள்ளது.

ஆதலால், வழக்காளிகள் மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக வழக்குச் செலவு உட்பட மேற்குறிப்பிட்ட நிவாரணங்களைக் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என்று அறியத்தரப்படுகின்றது.
இவ்வழக்கு 2023/06/30 திகதி திறந்த நீதிமன்றில் அழைப்படும்.

நீதிமன்ற கட்டளையின் படி

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 திகதி

பதிவாளர்
பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

(cs.51063)(N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியான ரெனிஸ் போட்டியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை சாதனை


ஐங்கரன் திரிஷானன்


ஸ்ரீநிமல் அபிமன்


விக்னேஸ்வரன் அஸ்விதா


மொஹமட்இம்ராம் நிஷா

இலங்கை ரெனிஸ் சம்மேளனத்தின் எஸ்.ரி.ஆர். குழுமத்தால் கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 25ஆம் திகதி வரை நடைபெற்ற தேசிய ரீதியிலான தனிநபர் ரெனிஸ் போட்டியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

எட்டு வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் ஒற்றையர் பிரிவு இரட்டையர் பிரிவில் விக்னேஸ்வரன் அஸ்விதா முதலாம் இடத்தையும் மொஹமட்இம்ராம் நிஷா இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

அத்துடன் 7 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் இரட்டையர் பிரிவில் ஐங்கரன் திரிஷானன் மற்றும் ஸ்ரீநிமல் அபிமன் ஆகியோர் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ய)



வடமராட்சி, அம்பன், குடத்தனை, நாகர்கோவில் பிரதேசத்திலுள்ள குளங்களில் நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை மேற்படி பிரதேச நீர் நிலைகளில் திலாப்பியா மீன் குஞ்சுகள் விடப்பட்டன. (ய-113)



## விழிப்புணர்வு

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் தலைமையில் பூமி அதிர்வு மற்றும் தீயணைப்பு தொடர்பான விழிப்புணர்வு இடம்பெற்றது. (ய-125)



சாவகச்சேரி நகர் அருள்மிகு அமிர்தபாஷினி சமேத [illegible] சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-159)



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டிஜிட்டல்' இலங்கை: நடைமுறை ஆராய்வு



கொழும்பு, ஜூன் 30

**இலங்கை அரசாங்கத்துக்கென தனித்துவமான டிஜிட்டல் அடையாளத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.**

ஒன்பதாவது நாடாளுமன்றின் நான்காவது கூட்டத்தொடருக்கான தொழில்நுட்ப அலுவல்கள் பற்றிய அமைச்சு ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் அமைச்சர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

குறித்த திட்டத்தின்படி, அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நபர்களின் சுயவிவரங்கள், முகம், கருவிழி மற்றும் கைரேகை தரவுகள் என்பன மத்திய தரவுக் கட்டமைப்பில் உள்வாங்கப்படும். அத்துடன் பிரஜைகளின் பிறப்புச்சான்றிதழ் முதல் அனைத்து ஆவணங்களையும் தரவுகளையும் ஒரு தனித்துவமான இலக்கத்தின் கீழ் டிஜிட்டல் மயப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராயப்படுகின்றது.

இதுதொடர்பான யோசனை உள்வாங்கப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. செயற்பாட்டுப் பொறிமுறையில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன எனக் கூட்டத்தின் போது அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். தாமதங்களையும் பின்னடைவையும் ஏற்படுத்தும் கடந்தகால ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, ஒரு தொகுதியிலிருந்து முன்னோக்கிச் செல்லும் வகையில் செயற்படுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

(ச-இ)



குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டுக் கிராம ஊர்வலம் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்படி ஆலய முன்றிலில் ஆரம்பமானது.

(ய-66)


## தேவை

பல்பொருள் விற்பனையில் ஓடர் எடுக்கக்கூடிய அனுபவமுள்ளவர்கள், சாரதிகள், அரைக்கும் ஆலை அனுபவமுள்ளவர்கள் தேவை.

077 772 2215




கொடிகாமம் மக்கள் வங்கிக்கிளையின் அனுசரணையுடன் மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை நடத்திய மாதிரிச்சந்தை கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

(ய-159)

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 07 . 1935



மறைவு 29 . 06 . 2023

### திருமதி கணபதிப்பிள்ளை தங்கமலர் (தேம்பு)

இணுவில் வீதி மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தங்கமலர் அவர்கள் நேற்று (29.06.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் அன்னமுத்து தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பையா சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணேஷ் அவர்களின் அன்புத் தங்கையும் மற்றும் நிர்மலாதேவி, சுசிலாதேவி, இரஞ்சிதமலர், திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபாஸ்கரன், பன்னிருகரன், சசிகரன், சசிகலா, குகேந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரதீபா, அனுஜா, சண்முகதாஸ், ஞானதீபன் மற்றும் கருணாகரன், பத்மாவதி, ஜெயகௌரி, கௌரிசங்கரி, கணேசராணி, கோணேஸ்வரி, உமாகணேசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கந்தையா, கந்தசாமி, நாகம்மா, பரமேஸ்வரி காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாயிசன், கஜனிகா, பிரவீஸ்கர், லக்சிகா, சாகித்தியன், காசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் வீதி,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 5512 943

(CS 25393) A-1



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் 10 ஆம் நாள் உற்சவமான திருமஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் நாகபூஷணி அம்மன் அடியவர்களுக்கு காட்சியளித்தார்.

(ச-ரி- 66)

## மரண அறிவித்தல்
### இறுதி நிகழ்வு பிற்போடல்

### திரு. சிங்கராசா வில்லியம் ஜோர்ஜ்



தோற்றம் 04.01.1959

மறைவு 15.06.2023

யாழ். ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும் குருநகர் மற்றும் சுவிஸ் (Sion) யை வதிவிடமாகவும் கொண்ட சிங்கராசா வில்லியம் ஜோர்ஜ் கடந்த (15.06.2023) வியாழக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (30.06.2023) நடைபெறவிருந்தது. ஆனால் அவரது பூதவுடல் இலங்கைக்கு கொண்டுவர தாமதமாவதால் இறுதி நிகழ்வு பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

169, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:
யோ.டொனால்ட் றீகன் - 077 728 3700

தகவல்:
குடும்பத்தினர்.
திருமதி வதனி ஜோர்ஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மாநாடு நேற்று நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி சமுதாயப் பணி, பக்தி நெறி 2023ஆம் ஆண்டுக்கான ஆன்மீக மாநாடு நல்லூர் முருகன் ஆலயத்திலிருந்து நேற்றுக் காலை ஆன்மீகப் பவனியாக காவடி உட்பட்ட பாரம்பரியக் கலைகளுடன் ஆரம்பமானது. அங்கிருந்து ஆரியகுளம் சந்தியினூடாக வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்தது. தொடர்ச்சியாக 108 விளக்கு பூசைகளுடன் ஆரம்பமாகி சிறப்பு பேச்சுகள், கலை நிகழ்வுகள் என்பன நடைபெற்றன. (அ-ஒ,125)

## மோட்டார்...

வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த மகேஸ்வரன் மயூரன் (வயது - 37) இருவருமே விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த அராலி மத்தியைச் சேர்ந்த இராசதுரை சூரியகுமார் (வயது - 29) சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

அராலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த 'அப்பாச்சி' மோட்டார் சைக்கிளும், யாழ்ப்பாணத்திலிருந்து அராலி நோக்கிப் பயணித்த பிளஸர் மோட்டார் சைக்கிளுமே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. அராலியைச் சேர்ந்த சரோஜன் சம்பவ இடத்திலும், மயூரன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரிபரிசோதனைகளை ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (அ-ஒ,27,66,125)

## முல்லைத்தீவில்...

இலங்கையில் 20 புதைகுழிகளை இனங்கண்டு 5 அமைப்புகள் அறிக்கை வெளியிட்டு சில நாள்களின் பின்னர் முல்லைத்தீவில் மேலும் ஒரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீர் இணைப்பை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தைத் தோண்டியபோதே, மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொக்கிளாய் பொலிஸாருக்கு இது தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது. அது பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக இன்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று தெரியவருகின்றது.

இந்தப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னரங்க எல்லைகள் 2009ஆம் ஆண்டு இறுதிப் போர் வரையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,19,125)

## பிக்குவின்...

கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாபர் மசூதிகளை (இந்தியாவில் அமைக்கப்பட்டது. இந்துக்களுக்குச் சொந்தமான நிலத்தை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டு பின்னர் இடிக்கப்பட்டது.) இந்துப் பிரதேசங்களில் உருவாக்காதீர்கள். தையிட்டியில் உருவாக்கப்பட்டது பாபர் மசூதியே. அதைக்கட்டிய பிக்குவின் ஆடையைக் களையவேண்டும். புத்த சங்கத்தைக் கூப்பிட்டு ஒழுக்கநெறியைக் கற்பியுங்கள். காசியப்பன், அசோகன், வட்டகாமினி வழியிலே நீங்களும் இவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றவேண்டும். இது உங்களுடைய கடமை. இந்து சமயத்துக்கும் முன்னுரிமை கொடுத்து மதமாற்ற தடைச்சட்டத்தைக் கொண்டு வாருங்கள் என்று கேட்கின்றேன். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைபடுத்தி இந்துக்களுக்கு ஒரு பிரதேசத்தையும், தமிழர்களுக்கு ஒரு பிரதேசத்தையும் உறுதிப்படுத்துங்கள் என்று கோரினேன் - என்றார். (அ-ஒ,125)

## இரு...

தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தாம் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியே நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.



சம்பவத்தில் இளைஞர்கள் இருவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்தனர் என்றும் பொலிஸார் கூறினர்.

புத்தூர் கலைஒளி கிராமத்தைச் சேர்ந்த பெண்களின் படங்கள் கணினியில் கிராபிக் செய்து அசிங்கமாக சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டன என்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் இளைஞர்கள் இருவர் மீது சந்தேகம் கொண்டு அவர்களின் வீடுகளுக்குள் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் புகுந்த 50க்கும் மேற்பட்டோர் அவர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அத்துடன், வீட்டுக்குள் இருந்த பெறுமதியான பொருள்கள் மற்றும் வீட்டு வளாகத்திலிருந்த வாகனங்களும் அடித்து சேதப்படுத்தப்பட்டன.

காயமடைந்த இளைஞர்கள் இருவரையும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதைத் தடுத்த போதும் அங்கு வருகை தந்த பொலிஸார் வானத்தை நோக்கிதுப்பாக்கிச்சூடு நடத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவத்தின் போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். காயமடைந்த இளைஞர்கள் இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், 25 பெண்களும் 6 ஆண்களுமாக 31 பேரைக் கைது செய்துள்ளனர். (அ-ஒ,26,27,66,125)

## விஜயகலா...

புத்தளம் கொழும்பு வீதியில் முந்தல், மங்கலேலிய பகுதியில் நேற்றுக் காலை விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் முந்தல் மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஹலவத்த பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். எனினும் அவரது உடல் நிலை கவலைக்கிடமாக இல்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. வாகனச் சாரதியும், அதில் பயணித்த மற்றுமொருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விஜயகலா மகேஸ்வரன் பயணித்த வாகனம் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி கவிழ்ந்ததிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர். சாரதியின் தூக்கக் கலக்கம் காரணமாக வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ-ஒ,இ)



## 2000 கிலோ...

தாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து பகுதி பகுதியாக வெட்டி எடுக்கப்பட்ட இரும்பு, நல்லிணக்கபுரம் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டு வாகனம் ஒன்றில் இரகசியமாக ஏற்றப்படுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதற்கு அமைவாக அங்கு சென்ற பொலிஸார் 2 ஆயிரம் கிலோ இரும்பை மீட்டதுடன் சந்தேகத்தில் 30 மற்றும் 40 வயதுடைய இருவரைக் கைது செய்துள்ளனர். (அ-ஒ,125)

## லைட்டர்...

இரவு சமையலுக்காக எரிவாயு அடுப்பை லைட்டர் மூலம் பற்றவைக்க முயன்ற வேளையில் அது வெடித்து அணிந்திருந்த ஆடையில் தீப்பற்றியுள்ளது.

எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று உயிரிழந்தார். (அ-ஒ,9)

## சந்தேகநபர்கள்...

கிளிநொச்சி மாவட்டக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இரண்டு சந்தேகநபர்களுடன் சூட்டுச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட இடியன் துப்பாக்கியும், மோட்டார் சைக்கிளும் கணேசபுரம் பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்த கவி என்று அழைக்கப்படும் கந்தசாமி கமல் திருநகரைச் சேர்ந்த டயஸ், மதன் ஆகிய இருவருமே துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,214)

## கடவுச்சீட்டு...

கடந்த 20ஆம் திகதி பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் 3பேர் கைது செய்யப்பட்டு சந்தேகத்தில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து இரு அரச பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கான அனுமதிப் பத்திரத்தை பரிசோதிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அநுராதபுரம் பிரதேச செயலக உதவி முகாமையாளர் மற்றும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக எழுதுவினைஞர் ஆகியோரே கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியாவில் ஹஜ் தொழுகை

வவுனியா, ஜூன் 30

வவுனியாவில் புனித ஹஜ் பெருநாள் வழிபாடுகள் தவ்ஹீத் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றன.

ஜமாத்தின் தலைவர் அஷ்ஷேய்க் ஸாதிகீன் தலைமையில் நடைபெற்ற வழிபாட்டில் பலர் பங்கேற்று தொழுகை மேற்கொண்டனர். (ச-ரி3-110)

## தற்காலிக 'லைசென்ஸ்' காலாவதி நீடிப்பு

கொழும்பு, ஜூன் 30

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் இருவருடங்களுக்கு நீடிப்பதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி ஆறுமாத காலத்துக்கு வழங்கப்பட்டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் மேலும் இருவருடங்களுக்குச் செல்லுபடியாகும்.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் நாளை வரையான காலப்பகுதியில் காலாவதியாகும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான செல்லுபடியாகும் காலமே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ச-இ)


**காணி விற்பனைக்கு**

புத்தூர் மீசாலை வீதியில் வேம்பிராய் சந்தியி லிருந்து 100m தூரத்தில் 19 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை.

Phone No. 077 924 0502
Email - gunavathanyk@gmail.com

**NEC** - யாழ்நகர்
பெருமாள் கோவில் அருகாமை
A/L 2025
கலை & வர்த்தகம்
ஆரம்பம் : 01.07.2023 சனி காலை 8.00 மணி
அலுவலக தொடர்பு : 076 535 0999

**NAVALAR**
COLLEGE OF ARTS&COMMERCE
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி - யாழ்நகர்
A/L 2025
கலை & வர்த்தகம்
ஆரம்பம் : 01.07.2023 சனி காலை 8.00 மணி
அலுவலக தொடர்பு : 076 535 0999

**TECHNO WORLD**
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்
புதிய பிரிவு - A/L 2025
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், கணிதம், சித்திரம்

திகதி : 01.07.2023 சனிக்கிழமை
ஆரம்பநேரம் : 8.30 a.m
தொடர்புகளுக்கு : 077 017 5346 (CR 40231) (N-1)

**கடை மற்றும் அறைகள் வாடகைக்கு**



**கடை**
காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்கள் வணிக நிறுவனங்களுக்கு ஏற்றதாகும்.
**அறைகள்**
வெளிமாவட்ட பயணிகள், சுற்றுலா பயணிகள்.
பொன்னாலை வீதி, மானிப்பாய்.
(பொலிஸ் நிலையம் அருகாமையில்)
தொடர்புகளுக்கு
076 212 9031

**வேலைவாய்ப்பு**

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.



- வெல்டர் (Welder)
- சுத்திகரிப்பாளர் (Cleaner)



மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் இன்று (30/06/2023) வெள்ளிக்கிழமை நாளை (01.07.2023) சனிக்கிழமைகளில், மு.ப. 9.00 - 2.00 மணி வரை நேரில் சமுகம் தரவும். முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 200,000/= (இரண்டு லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 8260 354, 076 0570 354

**சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி**

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனை பொருட்கள், விளையாட்டு பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடல் பட்டின்கள், குடைகள், அழகுசாதன பொருட்கள், மாஸ்க் வகைகள், கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்று கொள்ளலாம்.

உரிமையாளர்:
தே. கலைத்தாசன் (கரன்)
021 3155 900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி)யாழ்ப்பாணம்.


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
04 . 04 . 1936



ஆண்டவன் அடியில்
02 . 06 . 2023

### திருமதி பரமநாதன் ஈஸ்வரி

**(காலஞ்சென்ற முன்னாள் வர்த்தகர் சி.பரமநாதன் அவர்களின் மனைவி)**

வைகாசி விசாகத்தன்று (02.06.2023) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தாயார் திருமதி பரமநாதன் ஈஸ்வரி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று **(30.06.2023) வெள்ளிக்கிழமை** காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் **நாளைமறுதினம் (02.07.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது பூர்வீக இல்லமான 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில்** நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுக்கு உதவியவர்களுக்கும், அந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் மேலும் அனைத்து வழிகளிலும் எமக்கு ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.** (CS/51045)AH-1

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.